இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நவம்பர் 27 அன்று பொள்ளாச்சி மற்றும் சுற்று பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறந்த 50 குழந்தைகளுக்கு கழக மாநில நெசவாளர் அணிச் செயலாளர் கே.எம்.நாகராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், சியாமளா நவநீதகிருஷ்ணன், நவநீதகிருஷ்ணன், அய்யம்பாளையம் ராசு, சேர்வகாரன் பாளையம் ரமேஷ், கௌதமன், தர்மராஜ், கே.வி.கே.எஸ்.சபரிகார்த்திகேயன், மு.க.முத்து, அமுதபாரதி, ரகு (எ) துரைராஜ், ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், ஆனைமலை சாந்தலிங்கம், குணசேகரன், ரகுபதி, காளிமுத்து, ஜெயக்குமார், மருத்துவர் செந்தில்குமார் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர் பொதுமக்கள் என அனைவரும் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

க.செல்வராஜ் எம்.எல். ஏ. - இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், டிச. 3 - திருப்பூர் மாவட்டம், கொடுவாய், என்.காஞ்சிபுரம், எல்லப்பாளையம் புதூர் பிரிவில் நடைபெறும் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது என திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மாண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொடராக திகழ்ந்து கழகத்தையும், தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி, இந்தியாவின் நம்பர் ஒன் முதல்வராக தமிழ் நாட்டை சிறப்புடன் வழி நடத்திவரும் கழக தலைவர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருந்து எப்படி சிறப்பாக செயல்பட்டார்களோ, அதேபோல் திராவிட நாயகன், இளைஞர்களின் எதிர்காலம், இளைஞர் அணி செயலாளர் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று முதன் முதலாக திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார் என்பது நம் அனைவருக்கும் மிகழ்ச்சியான செய்தியாக அமைந்துள்ளது.

அமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டி அளவிற்கு தனது துறைச் சார்ந்த பணிகளை சிறப்புடன் செய்து வருவதோடு, நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு ஓர் வழிகாட்டியாக திகழ்ந்து வருகிறார்கள். தற்போதைய அரசியல் சூழலில் நாடே எதிர்நோக்கும் இளந்தலைவராக இவரது செயல்பாடுகள் அமைந்துள்ளது நம் அனைவருக்கும் பெருமைக்குரியதாகும், இத்தகைய பெருமைக்குரிய நமது கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் இன்று (03.12.2023 - ஞாயற்றுக்கிழமை) திருப்பூர் மாவட்டம், கொடுவாய், என்.காஞ்சிபுரம், எல்லப்பாளையம் புதூர் பிரிவில் நடைபெறும் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகைதர உள்ளார்கள். அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் எனவும்,

மேலும் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென வும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மாண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக 29.11.2023 அன்று பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், புதுக்கோட்டை மாவட்டம், மருதன்கோண்விடுதியில், 100 மாணவர்கள் தங்கும் வகையில் ரூ.2.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதியினை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, மருதன்கோண்விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு, விடுதி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர்எம்.எம்.அப்துல்லா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.த.ஜெயலட்சுமி, அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர் பாஷா, வெள்ளாளவிடுதி ஊராட்சிமன்றத் தலைவர் பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 27 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - டாக்டர் வை.முத்துராஜா - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ.3- கழக இளைஞர் அணி செயலாளர்இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு, நவம்பர் 27ந் தேதி புதுக்கோட்டை அரசு இராணியார் மருத்துவமனையில் பிறந்த 27 குழந்தைகளுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மாநில இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன்,

மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையன், க.மதியழகன், நகர கழக செயலாளர் ஆ.செந்தில், ஒன்றிய செயலாளர்கள் தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் சி.ஆர்.வி.சித்ரா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அ.ரெத்தினம், எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, வி.என்.எம்.பாலமுருகன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், சி.அரங்கநாயகம், வே.ராஜேஷ், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், க.கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், பெ.தெய்வானை, ஆர்.ரெத்தினசபாபதி, கி.சுப்ரமணியன், ஞானசேகரன், பிரபு கேண்டின் பன்னீர், வெங்கடேசன், கலையரசன், பழனித்துரை, வட்ட கழக செயலாளர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் ராமச்சந்திரன், பழனிவேல், பால்ராஜ், ராஜராஜன், ராஜாராம், திருப்பதி, சே.சரவணன், ஆர்.சி.எம்.தினேஷ், ஆதி, பிச்சை உள்ளிட்ட கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மற்றும் தி.மு.க. இளைஞர் அணி 2ம் மாநில மாநாட்டை முன்னிட்டும் பொள்ளாச்சி குமரன் நகர் பகுதியில் உள்ள பள்ளிவாசல் மண்டபத்தில் கற்பகம் மருத்துவமனை மற்றும் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி இணைந்து பொது மக்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் மருத்துவ முகாமை கழக சட்டிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் துவக்கி வைத்தார். மாவட்டப் பிரதிநிதி ஸ்வீட் நாகராஜ் தலைமையில் நகரச் செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன் வரவேற்புரையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் திருமலைராஜா, வட்டச் செயலாளர்கள் பஷ்ஹீல்ஹக், ஜெகதீஸ், ஜெயிலாபுதீன், கு.ராமசந்திரன், பூவை செல்வராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் மணிமாலா தென்றல், கவிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

வரதராஜன்பேட்டை - உடையார்பாளையம் பேரூராட்சிகளில்

அரியலூர் மாவட்டத்தில் ரூ.20.56 கோடி மதிப்பீட்டில்

குடிநீர் அபிவிருத்திப் பணிகளை சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், டிச.3- அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சி மற்றும் உடையார்பாளையம் பேரூராட்சிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.20.56 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் 15 வார்டுகளிலும் மற்றும் உடையார்பாளையம் பேரூராட்சியில் 15 வார்டுகளிலும் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் ரூ.8.72 கோடி மதிப்பீட்டில் வரதராஜன்பேட்டை பேரூராட்சி மற்றும் தென்னூர் பகுதியில் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான குடிநீர் அபிவிருத்திப் பணிகளையும், தொடர்ந்து உடையார்பாளையம் பேரூராட்சியில் ரூ.11.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தனிநபர் குடிநீர் தேவை நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் என்ற அடிப்படையில் பேரூராட்சியின் தினசரி குடிநீர் தேவை 0.671 MLD ஆகும். வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் 19 ஆழ்குழாய் கிணறு மூலம் 13 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு நாள் ஒன்றுக்கு 9.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 94 லிட்டர் என்ற அடிப்படையில் தினசரி 1 மணி நேரம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தற்போதைய மக்கள் தொகை உத்தேசமாக 9580 ஆகும். தற்போது 20232024 ஆம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.8.72 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் மூலம் ஆழ்குழாய் கிணறு 3 எண்ணிக்கையும், 0.90 இலட்சம் கொள்ளளவு கொண்ட சம்பு ஒரு எண்ணிக்கையும், 0.60 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியும், பிரதானக்குழாய் 2.95 கி.மீ நீளமும், பகிர்மான குழாய் 27.47 கி.மீ நீளமும் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் தனி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு கூடுதலாக 10 லிட்டர் வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று உடையார்பாளையம் பேரூராட்சியில் தற்போதைய மக்கள் தொகை உத்தேசமாக 14299 ஆகும். அதன்படி 17 ஆழ்துளை கிணறுகள் மூலம் 6 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு 6.40 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. இதன்படி தனிநபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 84 லிட்டர் என்ற அடிப்படையில தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. தற்போது அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் உடையார்பாளையம் பேரூராட்சியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மின்மோட்டார் 5 எண்ணிக்கையிலும், 1.50 லட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 1 எண்ணிக்கையும், 1 லட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 1 எண்ணிக்கையும், 3.601 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பிரதான குழாயும், 38.631 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாயும், 3180 வீட்டு குடிநீர் இணைப்புகளும் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ஒரு தனிநபருக்கு 96 லிட்டர் என்ற அளவில் குடிநீர் வழங்கப்படும்.

மேலும், வரதராஜன்பேட்டை மற்றும் உடையார்பாளையம் பேரூராட்சிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் துவக்கி வைக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும் பொழுது பேரூராட்சிகளின் அனைத்து வார்டுகளுக்கும் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், வட்டாட்சியர்கள் இளவரசன் (ஆண்டிமடம்), கலீலூர்ரகுமான் (ஜெயங்கொண்டம்), பேரூராட்சி செயல் அலுவலர் கோமதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சி தலைவர் மார்கிரேட் அல்போன்ஸ், உடையார்பாளையம் பேரூராட்சித் தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார்,

ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், ரெங்க.முருகன். ஆர். கலியபெருமாள், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, பேரூராட்சி செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜகான், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி, தங்கராசு, மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

தருமபுரி மாவட்டம், பருவதனஹள்ளியில் முன்னாள் ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டக் கழக செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மறைந்த பி.என்.பெரியண்ணன் அவர்களின் 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.முன்னாள் மாவட்டக் கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன்,ஒன்றிய கழக செயலாளர்கள் எரியூர்.செல்வராஜ்,முனியப்பன், இல.கிருஷ்ணன்,எம்வீடீ.கோபால், முருகேசன், சக்திவேல்,நல்லம்பள்ளி மேற்கு முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எச்சனஹள்ளி.வி.சண்முகம், மேற்கு நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜபார்ட் ரங்கதுரை மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆத்தூர் ஒன்றியம் அப்பம்மசமுத்திரம் ஊராட்சியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் மாணவ ,மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் நோட்டுப் புத்தகத்தை ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சேட்டு, கருணாநிதி, சண்முகம், வேலுமணி, ரஜினி, சக்திவேல், நடராஜ், சுரேஷ் மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கவிஞர் முடியரசன்
டிசம்பர் 3 (1998)



திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர்.

கழக இலக்கிய அணியின் தலைவராகப் பணியாற்றியவர்.

“1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர். அதிலும் குறிப்பாக முரசொலியிலும் முத்தாரத்திலும் அவர் கவிதை இடம்பெறாத நாளே இருக்க முடியாது” எனத் தலைவர் கலைஞரால் நினைவு கூரப்பட்டவர்.

தமது மூத்த வழித்தோன்றல் இவர்தான் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.